முரசொலி

2 அணா

மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை | 28 — 5 — 54 | வெள்ளி | ஒலி 9

★ 'சக்கரவர்த்தி திருமகள்' ★

"சக்கரவர்த்தி திருமகள்!"— யாரும் ஆச்சரியப்பட வேண்டாம், சக்கரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியாரின் திருமகளைப் பற்றித்தான் யாராவது சரித்திரம் எழுதப் போகிறார்களோ என்று! திரண்டு எழுந்த மக்கள் சக்திக்குப் பயந்து அரசியல் துறவு பூண்ட ஆச்சாரியார் தான் 'கல்கி' இதழில் இந்த தலைப்பில் ஒரு தொடர் கட்டுரை வரையப் போகிறார்.

"வேலும் வாளும் கொண்டு வாழ்ந்த மறக்குடி மகிபனே! மூவேந்தராம் சக்கரவர்த்திகளின் திருமகள் தமிழைப்பார்! அவளது மயில் கழுத்திலே இந்தி ஆதிபத்தியக்காரர்கள்தான் சங்கிலி இட வேண்டுமா?"—என்று வர்ணனைகள் பல கொட்டி ஒரு அழகான கட்டுரையை வார்க்கலாமே என்றுகூட தோன்றும், தலைப்பு சிந்தும் அழகு! ஆனால் ஆச்சாரியார் எழுதப் புகுவது தமிழின் சிறப்பைப் பற்றியோ, வள்ளுவனின் உயர்வைப் பற்றியோ அல்ல! மேழி பிடித்து நிலத்தைக் கீறியபோது ஜனகன் கண்டெடுத்தானே தேவமகள் சீதா—அவளைப் பற்றி ஒரு அழகான இராம காதை வரையப் போகிறார்! கட்டுரையின் முதல் பகுதியும் இந்த வார கல்கி இதழில் வெளி வந்திருக்கிறது.

அரசியல் கடலை அள்ளிக்குடித்தகுடமுனி—அரசியல் விற்பன்னர்— இங்ஙனம் மகானென்றும், மேதையென்றும் விளம்பரப் படுத்தப்பட்ட வருடைய பேனா; கொஞ்ச நாளாக மக்கள் மன்றத்திலிருந்து காமணுமற் போய்விட்ட ஜானகியின் புகழை யாஜபிக்க வேண்டும்?

"ஐந்தாண்டுத் திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகும் என் காங்கிரஸ் நண்பர்களே! இதோ பாருங்கள் உங்கள் திட்டங்களிலே உள்ள ஓட்டைகளை! அவைகளையெல்லாம் இப்படி மாற்றி அமையுங்கள்" என்று யோசனைகளை அள்ளி வீசும்தொண்டில் அவர் ஈடுபட்டிபாரே யானல்—"ஆச்சாரியார் தந்திரங்களைக் கையாளும் ஏகாதிருப்பத்திய வாரிசே வீர—எப்போதும் உபயோகப்படும் அரசியல் நிபுணரல்ல" என்று சொல்லும் எதிர்க் கட்சிக்காரர்களை யாவதுலூரளவுதிருப் செய்வதைப் போல இருந்திருக்கும்! ஆச்சாரியார் அதைச் செய்தாரில்லை. அதற்குமாருக செல்லரித்துப் போன வால்மீகியின் ஓலைச்சுவடுகளைப் புரட்டியபடியே இருக்கிறார்; புராணப் புரட்டுகளுக்கு புதிய மெருகு கொடுத்தபடியே இருக்கிறார்!

"பாவம்! அவர் என்ன செய்வார்! வயதோஎழுபத்தைந்துக்கு மேல் ஆகிவிட்டது; கடைசிக் காலத்தில்அவரை இப்படிவாட்டலாமா?"...என்று வரிந்துகட்டிக் கொண்டு கிளம்பி விடுகின்றனர், அவருக்காக பரிந்து பேசுபவர்கள்! மேலை நாட்டு அரசியல் தலைவர்களின் வரலாறுகளைப் படித்த பின்னர் இப்படி பரிந்து பேசுபவர்களைப் பற்றி பரிதாபப் பட வேண்டியிருக்கிறது.

மெய்யிலே பாய்ந்த குண்டுகளைக் கவனிக்க நேரமில்லாமல், கையிலே பிடித்த துப்பாக்கியோடு கண்கள் சொல்லும் குறியைத் தேடிஅலையும் இராணுவத் தளபதி— வயது ஐம்பதைத் தாண்டியதும் ஓய்வு பெற வீட்டுக்கு அனுப்பப்படுகிறான். பித்தானை அமுக்கியதும் வேலை செய்யத் துவங்கும் இயந்திரத்தைப்போல-அனுபவம் செலுத்தும் திக்கிலே பேனாவைத் திருப்பி ஜீவனம் நடத்தும் குமாஸ்தாவின் வாழ்வு, வயது ஐம்பது ஆனதும் அஸ்தமித்து விடுகிறது; அதற்குப் பின்னர் அவன் 'பென்ஷனை' நம்பி வாழ வேண்டியவனாகி விடுகிறான். ஆனால் அரசியலை தன் வாழ்வின் லட்சியமாகக் கொண்டு பொது வாழ்வில் குதித்து விட்டவனுடைய நிலைமை அப்படி அல்ல; "எனக்கு வயது 60-க்கு மேல் ஆகிவிட்டது; எனக்கு ஓய்வு வேண்டும்" என்று சொல்லி குற்றாலம் போய்விடுவதற்கு!

லட்சக் கணக்கில் பொது மக்களை தன் பக்கம் வசீகரித்த அந்த அரசியல் வாதியின் முகத்திலே ஆண்டுகள் கிழிக்கும் கோடுகள் அனுபவம் பதித்துச் செல்லும் மின்னல் கீற்றுகள்! வேறு பற்பல தொழில்களை பிழைப்பாகக் கொண்டவர்கள் வயதானதும் சுடுகாடு தன்பக்கம் வந்துவிடுகிறது என்பதைத்தான் உணரமுடியும். ஆனால் அரசியல் வாதியோ தன் வயோதிகப் பருவம் தன்னை பாமரர்களின் இதயங்களுக்கு அருகில்கொண்டு வந்துவிட்டதை உணர வேண்டியவனாயிருக்கிறான். அவர்களுக்கு அரசியல்தான் வாழ்வு; வாழ்வுதான் அரசியல்!

மேலைநாட்டு சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்களேன்; பின்னர் இந்த உண்மை புலப்படும்! 12— ஆண்டுகள் மந்திரி

(5-ம் பக்கம்)

அம்பிப்பயலின் விளையாட்டு பொம்மை?



~~~~~~~~

புதிய கல்வித்திட்டத்தை கைவிட்டு விட்டதாக அறிவித்த கல்வி மந்திரி அந்த கல்வித் திட்டத்தின் அருமை பெருமைகளைக் கூறி அசெம்பிளியில் புலம்பினார்.
~~~~~~~~

களங்கம் துடைப்பாரா? :: :: கண்ணியம் பெறுவாரா?

சென்ற 23-ம் தேதியன்று திராவிடர் இல்லங்கள் யாவும் திங்கள் பொருந்திய வானமண்டலம் போல காட்சி தந்தன. எங்கெனும் பேருவகை மலர்ந்த முகங்கள்—ஒளி சிந்தும் கண்கள்! புலிக்குட்டிகளாம் திராவிடச் சிறார்களை பொறியில் மாட்டி விக்கும் வேட்டுவனை—ஆச்சாரியாரை, அவர் தம் சிஷ்ய கோடிகளை அடித்து விரட்டினோம்! தேக்கி வைத்த மக்கள் சக்திக்கு பதில் சொல்ல முடியாமல் பதுங்கிவிட்டார்கள் பசப்பு வார்த்தைக்காரர்கள்! இந்த வெற்றியைக் கொண்டாடும்படி தி. மு. க. தலைமை நிலையம் அறிக்கை விட்டிருந்தது. அதன் படிதான் இப்படி அலங்காரமாக தோற்றமளித்தன, திராவிடத்து வீதிகள். மகிழ்ச்சி பொங்கிய உள்ளங்களின் எடுத்துக்காட்டாக இல்லங்களில் பொருந்திய தீப அலங்காரங்கள் காட்சி தந்தன! ஆச்சாரியார் பாஷைப்படி சொல்லப் போனால் காட்டாற்றில் குதித்து கக்கும் விஷப் பாம்பாம் திட்டிவிடத்தை அடக்கி அதன் மீது நின்று நர்த்தன மாடினானே பாலகிருஷ்ணன்—அதைப் போல இந்த நாள் குலதர்ம கல்வித் திட்டம் என்னும் கடுவிஷத்தைக் கக்கி கோர நாட்டியம் ஆடிய சனாதன வாதிகளின் குரல் வளையை நெறித்து, வெற்றிக் கூத்து ஆடுகிறார்கள் தென்னகத்து சிறுவர்கள்!

இந்த வேளையில் மகிழ்ச்சிப் பெருக்கால் மறைந்திருந்து தாக்கும் ராம பக்தர்களை நாம் மறந்து விடக்கூடாது. இன்று நாம் விடுதலை பெற்ற சிறுவர் கூட்டத்துக்கு இனிப்பு வழங்குகிறோம்—இன்பம் கொண்டாடுகிறோம். அதே நேரத்தில் தோல்வியெனும் வேம்பு உண்டு வேதனை கொண்டிருக்கிறது வேதியர் கும்பல்!

சட்ட சபையே சிரிக்கும் போது கனம் சுப்ரமணியம் மட்டும் வாய்விட்டுக் கதறியிருக்கிறார்—கலங்கி கண்ணீர் வடித்தவர் வைத்தினாத அய்யராயிருந்தால் நாம் கவலைப்பட்டிருக்க மாட்டோம்—அது வழக்கமான வியாதி என்று ஒதுங்கியிருப்போம்!

நீலவானத்து நிலவு திடீரென கீழே விழுந்து சேற்றிலே அமுங்கியதைப் போல உள்ளம் கொதிக்க, உடல் வியர்க்க நாகுழற கருத்த முகத்தோடு வேதனைச் சரக்கை கொட்டியிருக்கிறார். ஏழையின் கடைசி ரொட்டித் துண்டை களவாடும் போது—பொறியிலே அகப்பட்டுக் கொண்ட சுண்டெலி முணகிக் கொண்டுதான் சாகும் அதுபோல, தோல்வியின் கூரிய முட்கள் குத்துவதால்தான் சுப்ரமணியம் வேதனையை விருத்தமாக்குகிறார் என்றும் நினைக்கலாம்—ஆனால் நடந்தது அப்படியல்ல! தன் பேச்சு மூலம் நச்சுக் காற்றை சட்ட சபையிலே பரப்பியிருக்கிறார் என்று நினைக்கும் போது தான் நாம் வருந்த வேண்டியிருக்கிறது.

வலியவன் ஒருவனால் அடிபட்ட பள்ளிச் சிறுவன் அடித்தவனை நோக்கி கண்டபடி ஏசுவான், ஆங்காரத்தோடு கூச்சலிடுவான்—"என்னை அடித்துவிட்டாயே எங்க அண்ணனை உன்னால் அடிக்க முடியுமா?" என்று அழுகுரலில் சொல்லுவான் – மேலும் "எங்க அண்ணனை அடித்துவிட்டாலும் எங்க அப்பாவை உன்னால் தொட முடியுமா?" — என்று சவால் விடுவான்!

அந்தப் பள்ளிச் சிறுவனின் பரிதாப நிலைமையைத்தான் கனம் சுப்ரமணியம் நமக்கு நினைவுறுத்துகிறார். கொட்டும் மழையைப் போல பீறிட்டுக் கிளம்பிய கேள்விகட்குப் பதில் சொல்லும் போது சுப்ரமணியம் சொல்லுகிறார் "புதிய கல்வித் திட்டத்தைத் தான் கைவிட்டோம், ஆனால் நிச்சயம் காந்தியாரின் ஆதாரக்கல்வித் திட்டத்திற்கு புது மெருகு கொடுத்தே தீருவோம்"—இப்படி ஆக்ரோஷமாகப் பேசினார், "என்னைத்தான் அடித்துவிட்டாய் என் அண்ணனை — என் அப்பாவை உன்னால் அடிக்கமுடியுமா?"—என்ற தோரணையிலே! பாவம்! சுப்ரமணியத்தின் நிலை இரங்கத் தக்கது, பரிதாபத்திற்குரியது!

கனம் சுப்ரமணியம் மந்திரி சபையிலே முக்கிய பங்கேற்பவர் — முதன் மந்திரிக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் — முக்கியமான இலாக்காக்கள் அவர் கையிலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன! இங்ஙனம் மந்திரிசபையின் பொறுப்பான இடத்தில் — கேந்திரமையத்தில் அமர்ந்திருப்பவர் ஜனநாயக நாடுகள் கடைப் பிடிக்கும் முக்கியமான கொள்கை யொன்றை காற்றிலே பறக்க விட்டிருக்கிறார்.

மந்திரி சபை (கேபினெட்) என்பது அன்னத்தின் தூவியை பழிக்கும் பாலைப்போல! அதிலே அங்கம் வகிப்பவர்கள் அபிப்பிராய பேதம் என்னும் புளிப்பை துளி கலந்தார்களேயானால் அந்த பால் முறிந்துவிடும்—பின்னர் 'மந்திரி' சபைக்கு சொல்லப்படும் இலட்சணங்கள் மறைந்துவிடும்.

இந்த உண்மையை நால் நிலையங்கள் பலவற்றுள் நுழைந்து வந்திருக்கும் சுப்ரமணியம் மறந்துவிடுவார் என்று நாம் நினைக்கவில்லை. மந்திரி சபை கடைப் பிடிக்கும் கொள்கைகளில் மாறுபாடு ஏற்பட்டால் அதிலிருந்து விலகி விடுவது தான் ஜனநாயகம் கற்றுக் கொடுத்த அரிச்சுவடி. சென்ற லேபர்கட்சி மந்திரி சபையில் இந்த மாதிரி நிகழ்ச்சி ஒன்று நடந்திருக்கின்றது. பொய்ப் பல்லுக்கு வரி விதிக்க முடிவுக்கு வந்தது அட்லியைப் பிரதமராக கொண்ட மந்திரி சபை! அந்த அமைச்சுக் குழுவிலே அங்கம் வகித்த பெவான் "இந்த முறை ஏழைகளைப் பாதிக்கும்—இதைக் கைவிட்டுவிட வேண்டும்" என்று வாதாடினார். இறுதியில் மந்திரி சபை அவர் முடிவை ஏற்கவில்லை அபிப்பிராய பேதம் கொண்ட மந்திரி சபையில் அங்கம் வகிப்பது ஜனநாயகத்துக்கு முறணானதால் நான் மந்திரிசபையிலிருந்து விலகிக்கொள்கிறேன் என்று அறிவித்துவிட்டு, ராஜிநாமா செய்தார் பெவான்!

அதே சூழ்நிலைதான் சென்ற வாரம் சென்னையில் ஏற்பட்டிருக்கிறது.—"எல்லாம் இருட்டாக இருக்கிறது—வெளிச்சமே தெரியவில்லை" என்று பிலாக்கனம் படித்திருக்கிறார்—கனம் சுப்ரமணியம். "புதுக் கல்வித் திட்டம் நல்ல திட்டமென்பது தான் என் கருத்து; தனிப்பட்ட முறையில் நான் முடிவால் (கல்வித் திட்டஒழிப்பால்) சங்கடமடைந்துள்ளேன் என்று தன் உள்ளக் கிடக்கையை ஒளிவு மறைவில்லாமல்—அதுவும் காமராசர் எதிரிலேயே பறை சாற்றியிருக்கிறார்!

இப்படி சொன்னவர்—கருத்து வேற்றுமையை பறையடித்தவர்—உடன் பெவான் பாதையிலே சென்று பதவியை ராஜிநாமா செய்திருந்தால் ஜனநாயக நங்கை அமைச்சரின் முடிவைக்கண்டு கை நீட்டி வரவேற்றிருப்பாள்! மெஜாரிட்டிக்கு பணிய வேண்டியவன் என்ற முறையிலே கட்சியின் அங்கத்தினராக மட்டும் இருந்துவிட்டு—பொறுப் புள்ள மந்திரி என்ற முறையில் தனக்கு பிடித்தமான கொள்கையை அமுலாக்காத அமைச்சர் குழுவிலிருந்து விலகியிருக்க வேண்டும், கனம் சுப்ரமணியம்!—இப்படிச் செய்யத் தவறிவிட்டார், அறிவுக் கருவூலங்கள் பல கற்ற வழக்கறிஞர் சுப்ரமணியம்! தவறியது மட்டுமல்ல நாணயமான அரசியல் பாதையை இந்த நாட்டிலே அமைக்கும் பெருந்தொண்டிலிருந்தும் வழுவி விட்டார்! தவிர அரசியலில் அநாகரீகத்துக்கும் அங்குரார்ப்பணம் செய்துவிட்டார்!

பெவானைப் பழிக்கும் இந்த பெம்மான்கள் இன்னும் அரசியல் வானிலே உலவியபடிதான் இருக்கிறார்கள் — கொல்லைப்புறமாக நுழைந்த ஆச்சாரியாரின் அந்தரங்க சிஷ்யரல்லவா இவர்! எனவே உண்மையான ஜனநாயக வாதிகள் இந்த செயல் கண்டு அதிர்ச்சிக்குப் பாத்திரமாக வேண்டியதில்லை.

அவரே உண்மையை ஒத்துக் கொண்டிருக்கிறார்! பத்து நாட்களாக தூக்கமே வரவில்லையாம் அவருக்கு!

எப்படி தூக்கம் வரும்? ஆச்சாரியார் இட்டுச்சென்ற சனாதன முட்டையை துஞ்சாக் கண்ணனாக இருந்து அடைகாக்க வேண்டிய துவாரபாலகனல்லவா அவர்? அவருக்கு எப்படித் தூக்கம் வரும்?—ஜனநாயகப் பண்பாட்டிலிருந்து விலகியவர்கள் தூங்கியது கிடையாது – மக்கள் சக்திதான் அவர்கட்கு இறுதித் தூக்கத்தைத் தரவேண்டும். இது தான் வரலாறுகாட்டும் உண்மை! ஒருபுறம் கல்விதிட்டம் என்னும் செடியை நட்டவரே வேரைக்கெல்லி எறிகிறார்—இப்படி ஒரு நெருக்கடியான சூழ்நிலையை உண்டாக்கிய காமராசரின் ராஜதந்திரத்தைப் பாராட்டுகிறோம். இந்தவிதத்தில் "மகானை"யும் மிஞ்சிவிட்டார் இந்த விருது நகரத்து "மனிதர்"!

மற்றொருவரோ மனச் சாட்சியை விற்று — அபிப்பிராய பேதம் ஏற்பட்டும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார், தேனிலே மயங்கிக் கிடக்கும் ஈயைப்போல! இவரது நிலை கண்டு நாணிக் குனிகிறது நாணயமான அரசியல் தொண்டு! ஃ

களஞ்சியம்

[தி. மு. க. மாத இதழ்]

ஆசிரியர்: ஏ. எஸ். வேணு

தனி இதழ் 4 அணா
ஆண்டு சந்தா ரூ. 3

'களஞ்சியம்'

4, பரமானந்த முதலிதெரு
ஏழுகிணறு சென்னை-1.

தலையங்கம்

சென்னை (28—5—54) வெள்ளி

அந்த சுந்தரத் திருநாள் !

முத்துக் குலுங்கும் சோந்த நாட்டுக் கடலைத் தாண்டி, முக்கனிகள் உதிரும் சொந்த நாட்டுச் சோலைகளை மறந்து. இலங்கையிலே ரத்தக் கண்ணீர் வடிக்கும் தென்னகத்து மக்களின் நிலைமை மிகமிக பயங்கரமாகப் போய்க் கோண்டிருக்கிறது.

இந்த ஆண்டு முப்பதாயிரம் பேரும், 1956–ம் ஆண்டுக்குள் எழுபதாயிரம் பேரும், மூன்று ஆண்டுகளுக்குள் மோத்தம் ஒரு லட்சம் பேரும் இலங்கையிலிருந்து வெளியேறி இந்தியாவுக்கு வர வேண்டியிருக்கும் என்று இலங்கை இந்திய வர்த்தக சங்க தூது கோஷ்டி அறிவித்திருக்கிறது. வெளியேறும் அந்தத் தோகையில் மிகப் பெரும்பாலோர் சென்னை, திரு-கோச்சி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்த குழுவினர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி வெளியேறி வருபவர்களுக்கு வேண்டிய வசதிகள்–அகதிகளுக்கு செய்யப்படுவது போல—அவ்வளவு அவசர அவசியமாக செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

திருவிடத்தார், மூன்று ஆண்டு காலத்திற்குள் லக்ஷம் பேருக்கு மேற்பட்டவர் இலங்கைத் தரணியிலேயிருந்து விரட்டப்பட இருக்கிறார்கள். அகதிகள் போல வருவார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது. இலங்கையிலே குடியேறிய தென்னாட்டினர்-அந்நாட்டினைச் சுரண்டுவதற்காகச் சென்றவர்களல்ல! சென்ற பிறகும், பெரும்பான்மையோர் தங்களுக்கென செழிப்பான வாழ்வைச் சித்தரித்துக் கோண்டவர்களுமல்ல! அழுக்கை சாப்பிட்டு, தடாகத்து நீரை சுத்தப்படுத்தும் மீன்களாகப் போனார்களே தவிர, மான்வேட்டைக்குப் புறப்பட்ட வேங்கைகளாகச் சென்றவர்களல்ல, அந்த செந்தமிழ் நாட்டுச் சீரழிந்த செல்வர்கள்!

அவர்கள் இன்று 'நாடற்றவர்களாக' மதிக்கப்படும் நாதியற்ற நிலைமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இலங்கையை வளப்படுத்திய பெருமைக்குரியவர்கள் அவர்கள். தோட்டங்களிலே வேலை செய்து, உழைக்கும் கோட்டங்களிலே வியர்வை பெய்து, வயிறு வளர்த்த வைரமணிகள் அவர்கள். அவர்களது வாழ்விலே சில ஆண்டுகளாக சிக்கல் ஏற்புட்டு, அதன் காரணமாக சித்ரவதைக்காளாகிறார்கள்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அண்மையிலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி இலங்கை வாழ் இந்தியர்கள் தாங்களாகவே இஷ்டப்பட்டு இந்தியப் பிரஜைகளாக மாறினால் அவர்களை இந்தியா பதிவு செய்து கோள்வது என்பது தீர்மானமாயிற்று. அப்படி அவர்கள் இந்தியப் பிரஜைகளாக மாறினால், அவர்கள் வேலை செய்யும் தோட்டங்களிலே, கோஞ்சம் கோஞ்சமாக இலங்கையரை நுழைத்து, அதன் பிறகு இந்தியர்களை திருப்பி அனுப்பிவிடலாமேன்று இலங்கை சர்க்கார் கூறியது. இந்தியப் பிரஜைகளாக மாறும்படி இலங்கை அதிகாரிகள் அவர்களுக்கு அறிவுரை கூறலாம். பிரச்சாரம் செய்யலாம். மாறுவதற்கான வசதிகள் செய்து தரலாம். ஆனால், இலங்கை சர்க்கார் அதை விட்டு, இந்தியப் பிரஜைகளாக மாறாதவர்களுக்கு, பிழைப்புக்கு வேலை கிடையாதேன்றும்—ரேஷன் புத்தகங்கள் தர முடியாதேன்றும்-மிரட்டல் பாணங்களைத் தங்கள் அதிகாரிகள் மூலம் தோடுக்கத் துவங்கியிருக்கிறது.

இப்படிப் பலவந்தமாக இந்தியப் பிரஜைகளாக ஆக்கப்படும் நிலைமைக்கு ஆளானவர்களை, தாங்கள் பிரஜைகளாக பதிவு செய்து கோள்ள முடியாதேன்று இந்திய சர்க்கார் அறிவித்து விட்டது.

''இந்தியப் பிரஜையாக மாறு! பிறகு, உன் திறமையை எங்கள் இலங்கையருக்குப் புரியவைத்து, உன் இடத்திலே அவர்களை நிரப்பிய பிறகு உன்னை வெளியேற்றிவிடுகிறேன்'' என்று கோத்தலவாலை கோலு மண்டபம் உபதேசம் பொழிகிறது. அப்படி மாறும்படி பலவந்தமும் செய்கிறது.

''இஷ்டமில்லாத நிலையில் உன்னை இந்தியப்பிரஜையாக ஏற்றிட மாட்டோம்'' என்று இந்திய சர்க்கார் திருவாய் மலருகிறது.

அங்கேயும் உதை-இங்கேயும் உதை–என்ற நிலையில் கால்பந்து போல காட்சி தருகிறான், கண்ணீர் வடித்துக் கதறும் இலங்கை வாழ் திராவிடன்!

இஷ்டப்பட்டு பிரஜையானால் சேர்த்துக். கோள்கிறேன் என்று இந்தியா கூறுகிறதே; நாம் கேட்கிறோம்; அந்த பரிதாபத்துக்குரிய தென்னாட்டு "மனிதன் இஷ்டப்பட்டு பிரஜையாகும் நிலைமைக்கு தூண்டிவிடப்பட்டிருக்கிறான்' அப்படிப் பிரஜையாவதிலே அவனுக்கு ஒரு இன்பமோ, அல்லது நல்ல எதிர்காலமோ, இருக்குமேன்ற நம்பிக்கையிருந்தால், அவனைக் கட்டாயப்படுத்தியும் இந்தியப் பிரஜையாக்க முடியாத சங்கடம் இலங்கைக்கு ஏற்பட்டிருக்க முடியாதே!

தென்னாடு, வந்தவர்களுக்கும், வட நாட்டுச் சுரண்டல்காரர்களுக்கும் வாணிபக் கூடமாய், விருந்து மடமாய் இருந்து, இதோ, வளமிழந்து எழில் இழந்து நிற்கிறது. இந்தத் திரு நாட்டின் புதல்வர்களோ—இலங்கை போன்ற நாடுகளை வளப்படுத்தி—உடனடியாக அவர்கள் வெளியேறினால் உற்பத்தி குறைந்துவிடும்; ஆகவே சிறுகச் சிறுக, அவர்களின் தோட்ட வேலைக்கு சீட்டு கோடுக்கலாம் என்று இலங்கை அரசு கருதுகிற அளவுக்கு–திறமையையும், உழைப்பையும் ஈந்து, தேய்ந்து போய்க் கிடக்கிறார்கள்.

''தென்னகத்து மாதாவே! உன் தேய்ந்து போன மகனை விரட்டுகிறேன்! ஏற்றுக்கோள்!'' என்கிறாள், இலங்கை எழிலரசி.

''அவனாக இஷ்டப்பட்டால் வரட்டும்; ஏற்றுக் கோள்கிறேன்—நீ விரட்டினால்—விழியிலே நீரோடு வரும் அவனை அணைத்துக் கோள்ள மாட்டேன்!''

என்று பதில் குரல் கம்பீரமாகக் கேட்கிறது.

அது ஒரு தாயின் குரலாக இருக்குமேன்று யாராவது கூற முடியுமா?

தென்னகத்துத் தாய், சுதந்திரமாக இருந்தால் நிச்சயமாக அப்படி ஒரு பதிலைச் சொல்ல 'மாட்டாளே!

''வாடா! என் தங்க மகனே!'' என்று வாரி அணைத்து முத்தமிடுவாளே!

யாரோ ஒரு போலித்தாயின் குரல்தான் அப்படிக் கேட்கிறது; ''இஷ்டப்பட்டால் வரட்டும் ஏற்றுக் கோள்வேன்!'' என்று!

உண்மைத் தாயின் உணர்ச்சி நிறைந்த குரல் அல்ல அது!

இலங்கை மங்கை விரட்டுகிறாள்; திராவிட மகனின் இளமையை எல்லாம் பறித்துக் கோண்டு!

''வாடா—என் வண்ணமலரே! வாழ்ந்திடலாம் என் அன்பு மடிதனிலே!'' என்று அணைத்திட அன்னையால் முடியவில்லை! அவள் வாய் கட்டப்பட்டிருக்கிறது.

அந்தக்கட்டு அவிழ்க்கப்படாமலே போய்விடுமா? தன் கண்மணிகளை அன்னை தழுவிடாமலே போய்விடுவாளா?

நீ சோல்!

ஓங்கிப் பறக்கும் உரிமைக் கோடியே!
வீங்கி உயரும் வீரர் தோளே!
கூவு பல முறை! கோட்டு முரசு!

திராவிடநாடு திராவிடருக்கானால், திக்கற்ற தென்னகத்து மக்களெல்லாம் சோந்த நிலம் திரும்பிவரும் அந்த சுந்தரத் திருநாள் நடந்தேதான் தீரும்!

இந்த உண்மையை உலகதிரக் கூவு!
உரிமைப் பேரிகை முழக்கியபடி கூவு!!

கும்பமேளர் கொலுவில்

டில்லி பார்லிமெண்டில் நிதி மசோதா விவாதத்தின் போது தென்னாற்காடு மாவட்டத் தோழர் கோவிந்தசாமிக் கச்சிராயர் எம். பி. அவர்கள் கல்லக்குடி அறப்போர் பற்றிப் பேசியிருக்கிறார். ''சென்னை மாநிலமக்கள் டால்மியாபுரம் என்ற பெயரை நீக்கிவிட்டு, ரெவின்யூ கிராமத்துக்கு உள்ள பெயரான 'கல்லக்குடி' என பெயரிட வேண்டுமென்று விரும்புகிறார்கள். 'டால்மியாபுரம்' என்பது சமீப காலத்திற்கு முன்பு முளைத்ததுதான். இதுபற்றிய கருத்துக்களை சம்மந்தப்பட்ட அமைச்சருக்கு பலர் விண்ணப்பித்துக் கொண்டுள்ளனர் — இந்தப் பெயர்மாற்றம் குறித்து தென்னாட்டு மக்களால் பெரும் போராட்டமும்நடத்தப்பட்டது. அதனால் சிலரது உயிரும் பறிபோயிருக்கிறது. எனவே இதை விரைவில் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று தோழர் கோவிந்தசாமி பேசியிருக்கிறார்.

அதற்கு 14–5–54ல் அமைச்சர் தந்த பதிலில், சென்னை ரயில்வே நிர்வாகம், சென்னை ராஜ்யத்துடன் இது சம்மந்தமாக தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது என்றும் சென்னை மாநில அரசும் ரயில்வே நிர்வாகமும் அளிக்கும் யோசனைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இது பற்றிய செய்தியை தோழர் கோவிந்தசாமி கச்சிராயர் தி. மு. க. தலைமை நிலையத்திற்கு அனுப்பியிருக்கிறார்.

'கல்லக்குடி' என்ற பெயர் இருப்பதே முறையானது – அவசியமானது என்று காமராசர் சர்க்கார் சொல்லுமென்று நம்புகிறோம்–'கல்லக்குடி' கல்லக்குடியாகவே அதிகாரப் பூர்வமாக காட்சிதருமென எதிர்பார்க்கிறோம்.

4

சென்ற இதழின் தொடர்ச்சி

சந்தனத்தின் வேகம் நிறைந்த ஓட்டத்தை பிடிக்க முடியவில்லை. தந்தை ஏதோ ஒரு விபரீத முடிவோடு செல்கிறார் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்துவிட்டது அவனுக்கு; எப்படியும் அப்பாவிடம்மன்னிப்புக் கேட்டுவிட வேண்டுமென்று அவன் துடித்தான். ஐந்து விரலோடு ஒட்டி ஒரு சிறு விரல் முளைத்திருந்தால் அந்த மனிதனைப் பார்த்து; "ஏ ஆறு விரல்" என்று அழைத்தால் அவனுக்கு எவ்வளவு கோபம் வருகிறது— அழைப்பதென்ன; "ஆறு விரல் உடையோனே! ஆசையுள்ள ஆண் மகனே!" என்று போற்றிப் பாடினால்கூட அவன் ஆத்திரமே கொள்வான்—"ஐந்து கரனே! ஏக தந்தனே! மூஷிக வாகனா!" என்று பக்தர்கள் கேலியாக அழைக்கும் போது விநாயகர் வேண்டுமானால் தன் அங்கஹீனங்களையும் அவலட்சணங்களையும் நினைத்து கவலைப் படாமல் கல்லுப்போல உட்கார்ந்திருக்கலாம்; உயிருள்ள மனிதர்கள் அந்தக் கேலிகளை சகித்துக் கொள்வது மிகவும் கஷ்டம்தான். அதுவும் தந்தையின் அவலட்சணத்தை மகனே கேலி பேசுவது என்றால் அதை சந்தனம் பொறுத்துக்கொள்ள முடியுமா? தனக்கு ஏற்பட்ட அந்த விகார உருவை நினைத்து, நினைத்து மனம் புழுங்கிப் போனவனல்லவா அவன்—ஆகையால் அவனால் தன்செல்வத்திருமகனை மன்னிக்க முடியவில்லை. மன்னிப்பு பெற ஓடோடியும் வரும் மகனையும் திரும்பிப் பார்த்திடும் எண்ணம் எழவில்லை. சரி— இனிமேல் தந்தையைக் காண முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டான், ஓடிக் களைத்த செல்வம். மேல் மூச்சும், கீழ் மூச்சும் போட்டி போட, ஓரிடத்தில்நின்றுவிட்டான். நின்று, சந்தனம் ஓடியதிக்கையும் அறிய முடியாமல் தவித்தான். அவன் கண்களில்இருபெரும் நீர்வீழ்ச்சிகள்-அவன் வாய் முணு முணுத்தது-அதுவும் திணறித் திணறி-நாக்குழறிக்குழறி! "அப்பா! அப்பா!"—பிறகு ஓவென அலறிவிட்டான் செல்வம். எவ்வளவு நேரம் அப்படி அலறிக் கொண்டிருந்தானோ தெரியாது; பின், வந்த வழியே திரும்பினான். சித்ராவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அந்த இருட்டில் இனிமேல் அவனை எங்கு போய் தேடுவது; தேடிக் கண்டுபிடித்தால்தான் அவன் இருதயத்தின் சுமையைக் கொஞ்சம் குறைத்திட முடியும்—சித்ராவும் அவனும் காதலர்கள்தான்; ஆனால் அவன்சித்ராவின் வீட்டுக்குச் சென்றதில்லை — சித்ராவின் தாயார் தங்கம்மாள், அவர்களுடைய காதல் கதைக்கு உடனடியாக மதிப்புரை எழுதக்கூடிய குணம் படைத்தவள் அல்ல என்பதை செல்வம், சித்ராவின் வாயிலாகக் கேள்விப்பட்டிருக்கிறான். அதனால் அவன் அவளுடைய வீட்டில் நுழைந்ததே இல்லை. தங்கம்மாள் ஏழைதான் என்றாலும், தன் மகள் சித்ராவை செல்லமாக வளர்த்து வருகிறாள்; அவள் பிரியப்படியே நடந்து வருகிறாள்—என்றெல்லாம் காதலியின் மூலமாக அவன் கேட்டிருக்கிறானே தவிர, தங்கள் இருவரின் காதல் தோன்றிய நாள் முதலே நோயுற்றுப் படுக்கையிலிருக்கும் சித்ராவின் தாயார் தங்கம்மாளை அவன் சந்திக்கத் துடித்தும், சமயம் ஏற்படவில்லை. "உன் அம்மா வியாதியாயிருக்கிறார்களே; அவர்களை நான் பார்க்கிறேனே; நான் பார்த்ததே இல்லையே" என்று செல்வம் சொன்னபோதெல்லாம்; "அய்யோ வேண்டாம்— எங்கம்மா பெரிய பழைய காலம்; மூட நம்பிக்கையின் சிகரம்; அவர்கள் நம்மிருவரையும் சேர்ந்து பார்த்தால் உடனே புரிந்துகொண்டு, இந்த சகவாசம் எல்லாம் கூடாது சித்ரா! என அழ ஆரம்பித்து விடுவார்கள்" என்று அவள் அவனை வீட்டுக்கு வராமல் தடுத்திருந்தாள். அத்தகைய தாயைப் பெற்றிருக்கும் தன் அருமைக் காதலியின் வீட்டுக்கு இப்போது அவன் எப்படியும் போய்த் தீர்வது என்று முடிவு கட்டிவிட்டான். தந்தையின் திடீர்ப்பிரவேசத்தால் தீ மிதித்தவள் போலாகிவிட்ட என் மலர்ப்பாதமுடையாள்-மன வாட்டத்தை சுமக்க முடியாமல் தூக்கத்திலிருந்து விடுபட்டு துடித்துக்கொண்டு தானிருப்பாள்—கொல்லைப்புறம் நின்று கொண்டு, ஒரு குரல் கொடுத்தால் போதும்; எப்படியும் ஓடி வந்து விடுவாள்—பூனையின்பாதத்தைவிட மிருதுவான பஞ்சுப் பாதங்களாயிற்றே அவளுக்கு; அதனால் அவள் அம்மாவின் காதுகளை நன்றாக ஏமாற்றிவிட முடியும்—இருவரும் சந்திக்கலாம்; இருதயக் கீறல்களுக்கு மருந்து போட்டுக் கொள்ளலாம் என்று எண்ணியவாறு செல்வம், சித்ராவின்வீடுநோக்கிநடந்தான். கொல்லைப்புற வேலியைத்தாண்டிக் குதித்தான். அப்போது அவன் காலிலேகுத்திய முட்கள் கணக்கிலடங்கா. அவைகளையெல்லாம் எடுத்தெறிந்தான். 'இந்த முட்களை எடுத்துவிட்டேன்; என்நெஞ்சிலே சொருகிவிட்ட முட்களை வேதனையில்லாமல் எடுத்துவிடமுடியுமா? அல்லது எடுக்கும் முயற்சியிலேயே இறந்துவிட வேண்டுமா' என்றெல்லாம் அவனுக்குள்ளாக சொல்லிக் கொண்டான். அந்த நல்ல வாலிபனின் காந்திநிறைந்த முகம், தூசி நிறைந்த கண்ணாடி போல் ஆகியிருந்தது. நிலவின் ஒளியிலே சித்ராவீட்டுக்கொல்லை வாயிலை அவன் அடையாளம் கண்டு பிடித்துவிட்டான். அந்த வாயிலை நோக்கி அவன் நடந்தான். அவனுக்கே அவனை நம்ப முடியவில்லை. கதவு திறந்து கிடந்தது. சற்று திகைத்தான்— நின்று கவனித்தான்.. அவன் நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. மீண்டும் உன்னிப்பாக கவனித்தான். உள்ளேயிருந்து தேம்பும் குரல் கேட்டது! விக்கி விக்கி அழுகிற ஒரு பெண்ணின் தொனிதான் அது!

"சரி—நமது விஷயம் அவள் தாய்க்கும் தெரிந்துவிட்டது; அதனால் மகளைக் கண்டித்திருக்கிறாள்!" என்று தனக்குத் தானே பதில் சொல்லிக் கொண்டான். அவன் நெஞ்சு முன்னிலும் பலமாக அடித்துக் கொண்டது. அழுகை ஒலியுடன்— 'அம்மா! அம்மா!' என்ற ஒலியும் கொஞ்சம் உச்சஸ்தாயியில் கேட்டது. "சித்ரா!" என்று கூப்பிட்டுவிடலாமா என்று தோன்றியது அவனுக்கு! "ஒரு வேளை—நோயால் பீடிக்கப்பட்டிருந்த அவள் தாய் திடீரென இறந்திருக்க வேண்டும்" என்ற யூகமும் பிறந்தது— ஆகவேமெதுவாக அடியெடுத்து வைத்து வீட்டுக்குள் பிரவேசித்தான்; உள்ளே பார்த்தான். மினுக் மினுக் கென்று ஒருமங்கலான விளக்கு, தன்னால் முடிந்த கடமையைச் செய்து கொண்டிருந்தது. அந்த ஒளியிலே சித்ரா கீழே சுருண்டு படுத்திருப்பதும் தெரிந்தது. சுற்று முற்றும் பார்த்தான். ஒரு கயிற்றுக் கட்டில்—ஆம்; அதில் தான் நோயுற்ற அவள் தாய் படுத்திருக்க வேண்டும்—இப்போது அவள் எங்கே போய்விட்டாள்? ஒரு வேளை தன் தகப்பனைப் போல அவளும் எங்காவது ஓடிவிட்டாளா? இதை யெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்க செல்வத்துக்கு நேரமில்லை. அவன் சித்ராவைப் பார்த்ததும் 'சித்ரா!' என்று கதறிவிட்டான். அவளும் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தாள். "செல்வம்" என்று கூவியபடி அவன்மீது தாவிவிட்டாள். இருவரும் சிறிது நேரம் எதுவுமே பேசவில்லை; அழுது கொண்டிருந்தார்கள்.

"ஏன் சித்ரா, அழுகிறாய்! அம்மா எங்கே?"

"அம்மாவா?"

"அம்மாவுக்கு என்ன......?"

"அம்மா!"

"அழாதே சித்ரா! விஷயத்தைச் சொல்!...அம்மா எங்கே போனார்கள்?"

"திரும்பி வராத இடத்துக்கு போகிறேன் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்கள்!"

"ஆ!......இறந்து விட்டார்களா?"

"இறந்து விடுகிறேன்—என்னை இழந்துவிடு சித்ரா! என்று கூறிப் போய்விட்டார்கள்!"

"புரியும்படி சொல்—நானே குழப்பமாக இருக்கிறேன்—நீ அதை அதிகப்படுத்திவிடாதே!"

"நம்மிருவரின் காதலை அம்மா தெரிந்து கொண்டார்கள்"

"என் அப்பாவைப் போலக் கோபித்துக் கொண்டார்களா?"

'அப்படித்தான் எதிர்பார்த்தேன்—ஆனால் என் அம்மா, அவ்வளவு கோபமடைய வில்லை. புத்தி சொன்னார்கள்; காதல் புனிதமானதுதான் — ஆனால் அதிலே வெற்றிபெறுவது கஷ்டம், சித்ரா! இந்தப் பாழும் உலகம் காதலுக்கு விதிக்கும் கட்டுப்பாடுகள் மிகப் பயங்கரமானவை—'நாடகத்தில், காவியத்தில் காதலென்றால் நாட்டினர் தாம் வியந்து நன்றாம் என்பர் — வீடகத்தே கிணற்றோரத்தே ஊரினிலே காதலென்றால்உறுமுகின்றார்—பாடை கட்டி அதைக் கொல்ல வழி செய்கின்றார்"—என்ற பாரதியின் பாட்டைக் கேட்டும் திருந்தாத நாடு பெண்ணே, இந்தக்கேடு கெட்ட நாடு! என்று அழாக்குறையாகச் சொன்னார்கள்"

"அய்யோ அவ்வளவு நல்லவர்களா உன் அம்மா!-உம்; பிறகு என்ன நடந்தது சித்ரா?"

"அம்மாவின் உபதேசம்தான்! 'கேளடி என் கண்ணே—உலகம் மிகப் பொல்லாதது! அதன் கோரப் பற்களுக்கிடையே அகப்பட்டுப் போன காதலர் தொகை ஏராளம்! ஏராளம்!! தினைப் புனத்து வள்ளிக். குறத்திக்கும், தேவலோகத்து முருகனுக்கும் கல்யாணம் செய்து அந்த திருவிழாவை நடத்தும் பக்தர்கள், தங்கள் வீட்டிலே அப்படி ஒரு காதல் திருமணம் நடக்க வொட்டாமல் நல்ல பாம்பு போல் சீறுவார்கள்—கடவுள் காட்டிய பாதையையே அலட்சியம் செய்வார்கள்' என்று கண்ணீர் சிந்தியபடி அம்மா பேசினார்கள்"

"உன் அம்மா இங்கிருந்தால் இப்போது ஒரு திருத்தம் கூட சொல்லுவேன்— தேவலோகத்து முருகன் என்றால் வெறும் பிரமச்சாரி முருகனல்ல; தெய்வயானையின் புருஷன் கூட! அவனுக்கு ஒரு குறப் பெண்ணை இரண்டாந்தாரமாகமணமுடித்து வைக்கும்—இந்த "சட்டம் மீறி"கள்—காதலுக்குத் தடை போடுகிறார்கள் என்று!"

"அந்தத் திருத்தத்தை அம்மா ஏற்கமாட்டார்கள்-ஆண்டவனைக் குறைகூறல் அவர்களுக்குப்பிடிக்காது! அந்த நம்பிக்கையிலே தான் போலும் என் அம்மா—இப்படித்தன் வாழ்வைக் கெடுத்துக் கொண்டார்கள்!"

"எப்படிக் கெடுத்துக் கொண்டார்கள்-கொஞ்சம் விளக்கமாகச் சொல்லேன் சித்ரா!"

"எனக்கே தெரியாது; விளக்கமாகச் சொல்ல! ஏதோ ஒரு பெரிய வேதனை என் அம்மாவின்' உள்ளத்தை உருக்கியபடியிருந்தது என்பது மட்டும் எனக்குத் தெரியும்—நான் காணமலிருக்கிற எத்தனையோ சமயங்களில் அவர்கள் அழுதிருக்கிறார்கள் என்பதை அவர்கள் கண்கள் சொல்லும்—தூங்குவது போல இரவில் நான் படுத்திருக்கும் போது அவர்கள் தேம்பி அழுவதை நான் கேட்டிருக்கிறேன்"

"ஏன் என்று நீ கேட்டதில்லையா?"

"கேட்டாலும் பதில் கிடைக்காது. ஆகவே அது வழக்கமாகிவிட்டது!"

"சரி—இன்றைக்கு என்ன நடந்தது; அதைச் சொல்லு கண்ணே!"

"அம்மா என்னைத் தேடிக் கொண்டிருக்கும், போது நான் அழுதபடிவீடுவந்துசேர்ந்தேன். ஏன் அழுது கொண்டுவந்தேன் என்றுதான் தெரியுமே; நாமிருவரும் இனி சேரமாட்டோம் என்ற பயங்கர நினைவு என்னை அப்படி அழவைத்து விட்டது! அம்மா கேட்டார்கள்—ஏன் அழுகிறாய் என்று! நான் விஷயத்தை ஜாடையாகச் சொன்னேன்—அப்போதுதான் நான் இப்போது கூறிய உபதேசத்தை ஆரம்பித்தார்கள்—"

"சரி! நான் யாரென்று உன் அம்மாவிடம் சொன்னாயா?"

"அதைச் சொன்ன பிறகு தானே விபரீதப் புயல் வீச ஆரம்பித்தது!

"ஏன்?—என்ன காரணம்? அழாமல் சொல்லு சித்ரா!"

"உன் காதலன் பெயர் என்ன என்று கேட்டார்கள்; செல்வம் என்றேன்—அம்மாவின் முகம் மாறிவிட்டது. கண்கள் கலங்கிவிட்டன-செல்வத்தின் அப்பா எப்படியிருந்தார் என்று கேட்டார்கள்; பார்ப்பதற்கு பயங்கரமான முகம், அம்மா" என்று கூறினேன்—அவ்வளவு தான்; அம்மாவின் நிலையை என்னால் வர்ணிக்க முடியாது செல்வம்! தரையில் விழுந்து புரண்டு அழுதார்கள். நோயின் காரணமாக கட்டிலிலேயிருந்து எழுவதற்கும் இயலாத என் தாய், கட்டிலிலேயிருந்து தரையில் உருண்டதும், வீடு முழுதும் புரண்டதும் அய்யோ செல்வம்—என்னால், அதை நினைக்கவே முடியவில்லை! நான் 'அம்மா! அம்மா!' என்று அவர்களைத்தடுத்துப்பார்த்தேன். கதறிப் பார்த்தேன். என்னால் அடக்க முடியவில்லை, அவர்களை! பிறகு அவர்களாகவே எழுந்தார்கள். ஏதோ ஒரு உறுதியோடு நின்றார்கள்-"இந்தாசித்ரா, இதை வைத்துக் கொள்" என்று நான் இதுவரையில் காணமலிருந்த இந்த டைரியை என்னிடம் கொடுத்தார்கள்-கொடுத்துவிட்டு "அருமைக் கண்ணே! என்னை மறந்துவிடு! என்னை இழந்துவிடு! என்று கூறியபடி என்னை முத்தமிட்டார்கள்.

டைரியைப் படி! அதன்படி நடந்து கொள்! என்று மீண்டும் என் கன்னத்தில் முத்தங்களைப் பொழிந்தார்கள். எனக்கு மயக்கம் வந்துவிட்டது. பிறகு என்ன நடந்தது என்றே தெரியாது—இப்போதுதான் கண் விழிக்கிறேன்—என்செல்வத்தைக்காணுகிறேன். என் அம்மாவைஇழந்துவிட்டேனு செல்வம்; நான்? இனி மேல் அம்மாவைக் காணவேமுடியாதா செல்வம்?"

சித்ரா செல்வத்தின் தோளிலே சாய்ந்தாள்—

"சரி—அந்த டைரி எங்கே?" என்று செல்வம் கேட்டான்.

"நான் அதைப் பிரிக்கவும் இல்லை—இதோ இருக்கிறது" என்று கட்டிலின்மீது கிடந்த டைரியை எடுத்து அவனிடம் கொடுத்தாள்!—அவன் டைரியைப் பிரித்தான். முதல் பக்கத்தைப் பார்த்தான்—"அய்யோ! மோசம் போய்விட்டோம் சித்ரா!" என்று கூச்சலிட்டான் செல்வம்.

"என்ன என்ன?" என்று அழுகையும், ஆவலும் ததும்பக் கேட்டபடி டைரியை வாங்கினாள் சித்ரா.

ஆம்; மோசம் போய்விட்டதாகவே அவளும் முடிவு கட்டினாள்—டைரியின் முதல் பக்கத்திலே ஒரு காதல் ஜோடியின் புகைப்பட மிருந்தது. அதன் கீழே, சந்தனம்—குமுதம் என்று கையெழுத்தும் போடப்பட்டிருந்தது! குமுதம், வேறு யாருமில்லை—தங்கம்மாள்தான்! சித்ராவின் தாயார் தங்கம்மாள் தான் அந்த குமுதம்!

குமுதம் யார்?—செல்வத்தின் தாயார்!

தங்கம் யார்?—குமுதமே தங்கம்!

சித்ரா யார்? — குமுதத்தின் மகள்!

"அய்யோ, சித்ரா! நாமிருவரும் சகோதரர்கள்!" என்று அலறிக் கொண்டே அந்த டைரியை வீசியெறிந்தான் செல்வம். தாயின் குளிரை அடக்குவதற்காகப் புகைந்து கொண்டிருந்த கனப்புச் சட்டியிலே அந்த டைரி விழுந்து எரியத் தொடங்கியது. "சகோதரர்கள்—காதலர்கள்" அதனால்தான் அம்மா—ஓடிவிட்டாள் உயிரை விடுவதற்கு என்று புரிந்து கொண்டாள் சித்ரா! (தொடரும்)

சக்ரவர்த்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையிலே அங்கம் வகித்து 22-ஆண்டுகள் "பார்லிமெண்டின்" அங்கத்தினராக இருந்து புகழ் பெற்றவர் ஹெர்பர்ட் மாரிசன். போன லேபர்கட்சி மந்திரி சபையிலே முக்கிய பங்கேற்றார். இப்போது எதிர்க்கட்சியின் ஆசனத்தில்அமர்ந்து தன் அரசியல் வாழ்வைக் கழிக்கிறார்! பிறக்கும் போது அமெரிக்காவின் சாதாரண பிரஜையாக பிறந்த ரூஸ்வெல்ட் தன் தளாத வயது தடை செயகிறது என்று ஓதுங்கி விடாமல் — கடைசி நேரத்திலும் அமெரிக்காவின் முதல் பிரஜையாக — மக்களின் நெஞ்சு கவர்ந்த ஜனதிபதியாக இருந்தே உயிரை விட்டார்!

ஆச்சாரியார் வேண்டுமானல் ஸ்மிருதியும் உபநிஷதமுமே உலகம், என்று நம்பியிருப்பவர்களை மட்டுமே "ஓய்வு" என்னும் திரைபோட்டு தன் துறவை மூடி மறைக்கலாம். ஆனல் சரிதம் கற்றவர்களுக்கு அந்த உண்மை விளங்கியே தீரும்.

சாகும் வரையில்—பெற்ற புகழ் கொஞ்சமும் சிதறிவிடாமல்—மக்களின் மனமறிந்து நடக்கும் வித்தைசாதாரணமானதல்ல! ஜனநாயகத்துக்கு மதிப்பு தரும் மனிதர்களால் மட்டுமே செய்யக் கூடிய 'பகீரதப்பிரயத்தனம்' அது!

ஆச்சாரியாரின் துறவுக்கு ஒரே விளக்கம் போதும் — அந்தக் குலுகபட்டர் மக்கள் மன்றத்தை மதிக்க வில்லை — எனவேதான் அந்த "மகான்" சாய்ந்து விட்டார், அரசியல் மண்டபத்து சிம்மாசனத்திலிருந்து! எனவேதான் "தெருவெல்லாம் பகவான் திருநாமம் ஒலிக்க வேண்டும். ஆகவே பக்தர்களே பஜனை செய்யுங்கள்" என்ற ரீதியில் தன் உபதேசத்தை ஆரம்பித்து விட்டார்!

மேலைநாடுகளில் கூட சில சமயம் மேதைகளில் சிலர் அரசியல் வாழ்விலிருந்து விலகி நிற்க நேருவதுண்டு; ஆனல் அவர்களில் யாரும் பைபிளுக்கு புது வியாக்யானம் தந்தார்கள் என்று கட்டுக்கதை கூட கிடையாது! இந்தக் கேடு கெட்ட நாட்டிலே தான் நாம் கேள்விப் படுகிறோம் மக்களால் விரட்டி அடிக்கப் பட்டவர்கள் புராணப் பிரசங்கம் செய்யும் செய்தியை!

ட்ரூமன் கூடத்தான் இப்போது அரசியலில் படாமல் ஒதுங்கியிருக்கிறார்; ஆனல் அவருக்குப் பின்னர் அமெரிக்கரின் இதயங்களில் அவர்பெயர் நிலவி நிற்க ஒரு அருமையான புத்தகமொன்றை தயார் செய்கிறார் என்றுதான் பத்திரிக்கையிலே படிக்கிறோமே தவிர, கிரேக்க நாட்டு கடவுள்களைப் பற்றியோ — அல்லது அமெரிக்க நீக்ரோக்களிடையே பரவியிருக்கும் பேய் பிசாசைப் பற்றியோ தொடர் கட்டுரை வரைகிறார் என்றல்ல!

ஆனல் ஆச்சாரியாரும், ட்ரூமனும் இரு துருவங்கள் — இருவரும் எட்டிப்பிடிக்க முடியாத தூரத்திலே நிற்கிறார்கள்.

[7-ம் பக்கம் பார்க்க]

கலைத்தோட்டம்

புவிப்பெரியார்—பெர்னாட்ஷா

அவரோ வாழ்வின் இறுதி அத்தியாயத்தில் கோலூன்றி நடக்கும் குடு குடு கிழவர்! நாடிசோர்ந்து, நரம்பு தளர்ந்து நரைமுதா பருவத்தை எட்டிப் பிடித்த பெரியார்!

அவளோ, அழகு ஒளிவீசும் ஆரணங்கு, விழி மோகினி, வில் புருவத்தினள்! ஆனால் அந்தப் பேரழகிதான், அந்தப் பெருங் கிழவனுக்குக் கடிதமெழுதினள், "நான் அழகி, நீங்கள் அறிஞர், நம் இருவருக்கும் பிறக்கும் குழந்தை என்போல அழகாகவும், தங்களைப் போன்று அறிவு பெற்றதாகவும் இருக்கும்; ஆகவே நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம்" என்று.

அதற்கு அந்த "மாஜிவாலிபர்" 'உனது ஆசை நிறைவேற தடங்கல் ஒன்று உளது, நமக்குப் பிறக்கும் குழந்தை அழகில் என்னைப் போலவும், அறிவில் உன்னைப் போலவும் இருந்து விட்டால் என்செய்வது" என்று எழுதினராம்- அப்பேர்ப்பட்ட அழகுக் கனியை உதறித்தள்ளிய அணில்யார்? புஷ்டி தரும் கெட்டிப்பாலை அருந்தமறுக்கும் பூனையுமா இந்த இருபதாம் நூற்றாண்டில் இருக்கிறது என்று எண்ணத்தோன்றும் உங்களுக்கு! ஆமாம், அப்பேர்ப்பட்டவரும், இந்தவையகத்தில் வாழத்தான் செய்திருக்கிறார் — அதுவும் வகையோடு, புவனம் உள்ளவரை எவராலும் மறைத்திட முடியா மாப்புகழுடன் வாழ்ந்து செத்திருக்கிறார்.

அலுவலகச் சக்கரத்தின் ஒரு ஆரக்கால் எனக்கருதப்பட்டு குனிந்த தலைநிமிராமல், பிடித்த பேனாவை கீழே போடாமல் உழைத்து நையும் குமாஸ்தாவாக வாழ்வைத் தொடங்கி, எழுத்தை நம்பி வாழமுடியாது என்ற பழிச்சொல்லை தன்னைப் பொருத்த வரையில் பொய்யாக்கி மறைந்து விட்டார் அந்த மனிதகுலமாமேதை பெர்னாட்ஷா.

பிறந்து விட்டோம் இந்த உலகில், இனி காலங்கழித்தால் போதும் என்று அவர் எண்ணிய காலமும் ஒன்று இருந்தது. ஆனால் அவரே எதிர்பார்த்திருக்க மாட்டார், "கரும்பலகையையும், சுண்ணாம்புக் கட்டியையும் நம்பிவாழும் தசை இயந்திரங்களான ஆசிரியர்களும், குமாஸ்தாக்களும் முன்னேற முடியாது" என்று தானே எழுதப் போகிறோமென்று.



பெர்னாட்ஷா!- இந்தப் பெயர் உலக மொழி அகராதிகளில் ஒரு புதிய சொல்லை இணைத்து விட்டது.

பெர்னாட்ஷா!—எழுத்தாற்றலும், பேச்சுவன்மையும் ஒருங்கே அமையப்பெற்ற நல்லறிவாளனைக் குறிக்கும் காரணப் பெயராகி விட்டது.

அவர் நடிப்புக்கலைஞன், நாடகப் பேராசிரியர், தலைசிறந்த தத்துவஞானி, தரணிபோற்றும் பேச்சாளன்: ஷா உருவாக்கிய முதல் நாடகம் 'விடோயர்ஸ் ஹவுஸ்' என்பதாகும். அவருடைய எழுத்தோவியங்களின் பெரும்பகுதி ஷாவினுடைய 40வயதிற்குமேல் எழுதப்பட்டவைகள்தான். கூத்துக்கலைஞன் ஷேக்ஸ்பியர், குவலயம் சூட்டிய புகழ்மாலையை கழுத்திலேந்தி, அவருடைய எந்த வயதில் இறந்தாரோ அந்த வயதிற்குப்பிறகு தான் பெர்னாட்ஷாவுக்கு புகழ் சேரத் தொடங்கியது. பெர்னாட்ஷாகிண்டலுக்குப்பேர்போனவர் 'உலகத்தில் இரண்டு பெரிய மனிதர்கள்தான் இருக்கிறார்கள்; அந்த இருவர் நானும், ஸ்டாலினும்தான் என்று அவர் ஒரு முறை சொன்னராம். பெர்னாட்ஷாவை வைரியா நினைக்கும் வன்கணாளர்கள் இதைப் பயன் படுத்திக் கொண்டு பெர்னாட்ஷாவைதலைகர்வம்பிடித்தவர்என்று 'டமாரம்' அடித்ததையும் நாடு மறந்துவிடாது.

ஷாவின் தலை சிறந்த எழுத்துக் கருவூலங்கள் அவருடையமுதிர்ந்த பருவத்தில்-அறுபது வயதிற்கு மேல்தான் சித்திரிக்கப்பட்டன. 1926ல் உலகத்தின் இலக்கியச் சந்தையில் தன்னை ஒரு மேதையென பதிவு செய்து கொண்டார் நோபல் பரிசு மூலம்! பெருதற்கரிய அந்தப் பொற்குவியலை சுவீடன் நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கு அன்புக் காணிக்கையாகச் செலுத்தி விட்டார்.

ஷாவுக்கு எழுத்துலகில் சுவை தட்டிய பின்பு, அவர் ஓய்வு கொண்டதே இல்லை. எப்படியும் ஒரு நாளைக்கு இத்தனை பக்கங்கள் எழுதிவிடுவதென முடிவு கட்டி அதன்படி செய்தார்.

ஷாவின்புகழ் பரவத் தொடங்கியவுடன், கடவுள் பற்றிய கருத்தை, பலர், பலப்பல விதமாக அவரை அணுகிக் கேட்டனராம். அதற்கு அவர் 'கடவுள் உண்டென்பவன், அயோக்கியன், இல்லை யென்பவன் முட்டாள்' என்று பதில் சொன்னராம். ஷாவின் இந்த நேரடித் தாக்குதல் எத்தனையோ மத குருக்களின் மனதைக் குடைந்திருக்கிறது.

அவர் மறைந்தார்—ஆனால் அவருடைய இலக்கியத்தை ருசி பார்த்தவர்களின் இதயங்களை விட்டு அவருடைய ஒற்றை நாடி உடலும், ஓய்வில்லா சிந்தனையால் கோடு பின்னிய நெற்றியும் மறையவில்லை-மறையாது. ஷா மறையும் போது அவருக்கு வயது 94. மனிதன் சாவது உறுதி தான் என்றாலும். ஷா இறந்த செய்தி கேட்டபோது துடித்தோமே அன்றிஅவர் சாக வேண்டிய பருவம் தான் என யாரும் சொல்லிவிடவில்லை- அதற்குக் காரணம் மக்களுக்கு இலக்கியத்திலே ஒரு பிரிதினையும், கூத்துக் கலைக்கு ஒரு புதி ஜீவனையும்அவர்ஊட்டியதுதா

கோடீசுவரனாவதற்கு வழி!

ஒரு மாதத்தில் கோடீசுவரனாக வேண்டுமா? ஒரு உண்டியல் பெட்டி எடுங்கள். இன்றே அதில் முதன் முதலாக ஒரு பைசாவைப் போடுங்கள். நாளைய தினம், 2 பைசா போடுங்கள். நாளைக் கழித்து 4 பைசா போடுங்கள். அடுத்த நாள் 8 பைசா போடுங்கள். இப்படி ஒவ்வொரு நாளும் முந்திய நாள் போட்டதைப் போல் இரண்டு பங்குத் தொகைப் போட்டு வாருங்கள். இவ்விதம் 31 நாளைக்குப் போட்டு வந்தால், பெட்டியிலிருந்து ரூ. 11384810-10-7 கிடைக்கும்! நம்பிக்கையில்லையா? ஒரு தாளில் போட்டுப் பாருங்கள்!!

கருணாநிதி நிகழ்ச்சிகள்

மே-27 ஆலந்தூர் (சென்னை)
28 நுங்கம்பாக்கம்
29 பரமக்குடி
30 பீமநகர்

கருணாநிதி--இளங்கோ சுற்றுப்பயணம்

ஜூன்

1 வலங்கைமான் — அதங்குடி
2 மதுக்கூர் — துவரங் குறிச்சி
3 ஆலடிக்கு முளை — பனங்குளம்
4 ஒட்டன் சத்திரம் — (திருமணம்)
5 கீழ நம்மங்குறிச்சி — தலைஞாயர்
6 திருப்புகலூர் — நெடுங்குளம் — பொறையார்
7 சீர்காழி
8 மாயூரம்
11, 12, 13 நாஞ்சில் மாவட்டம்.

புதிய வெளியீடுகள்!

'முரசொலி' மே இதழில் வெளிவந்த

பரமபதம்-புதிய படம்

அழகான அட்டையில் — விலை 2 அணா

மனோகரா

புதிய பதிப்பு — விலை 8 அணா

முரசொலி-காரை பதிப்பகம்

சென்னை-14

சக்கரவர்த்தி திருமகள்...

(5-ம் பக்க தொடர்ச்சி)

சக்கரவர்த்தி திருமகனைப் பற்றி புதுஉரை தரும் ஆச்சாரியார், பொதுமக்கள் தான் இந்த மாநிலத்து சக்கரவர்த்தி – அவர்களின் பிரதிநிதிகளாக சட்டசபை நுழைபவர்களே அந்தச் சக்கரவர்த்தியின் திருமகனார்கள்; தந்தைக்கு தந்த வாக்குறுதியை காத்து நடக்க வேண்டியவர் என்ற உண்மையை மறுப்பவர்; எனவேதான் மூலையில்கிடக்கிறார் 'பாமரர்கள்தான் தன்னைப்பற்றி நினைக்கவில்லை; பஜனைக் கூடாமாவது தன் புகழ் பாடட்டும்' என்ற அற்ப ஆசையோடு!

ட்ரூமன் அந்த உண்மைக்கு மதிப்பளித்தவர்; ஆகவே இன்னும் அவர் மக்கள் மன்றத்திலே மதிக்கப் படுகிறார்!

ஆனால் உண்மையில் 'கல்கி'யில் ஆச்சாரியார் கொடுத்திருக்கும் தலைப்பு 'சக்கரவர்த்தி திருமகன்' என்பதாகும். ஜனகன் புத்திரிக்கும்—தசரதன் புத்திரனுக்கும் உள்ள தொடர்பை—அந்த கதையிலே தென்னிலங்கை வேந்தன் இராவணன் சிக்கிய விதத்தை ஆச்சாரியார் கதையாக்கிக் காட்டப்போகிறார்.

நாம், மூவேந்தரின் ஏகபுத்திரி தமிழ் இன்னல் படுவதை–இந்தி மொழி வெறியர்களின் தாக்குதலுக்கு ஆளாகி அடிமைப்படப் போவதை நினைத்து, நினைத்து கண்ணீர் மல்கி கசிந்து உருகுகிறோம். அங்கே மாம்பலத்து மாமுனிவர்—தம் தோல்விக்கு திரைபோடும் விதத்தில் சக்கரவர்த்தி திருமகனின் துணையை நாடியிருக்கிறார். அவர் காதையிலே வரும் திருமகனுக்கு அனுமன் துணை செய்ததைப்போல இப்போதும் பல சுக்ரீவர்கள், காட்டிக் கொடுக்கும் விபீஷணர்கள் நம்முடைய சக்கரவர்த்தி திருமகளை-தமிழ்த் தாயை அவள் அணிந்திருக்கும் ஆபரணமாம் அகத்தை புறத்தை வெட்டி வீழ்த்த முன்வருவார்கள்.

ஆனால் நாம் அறுதியிட்டுக்கூற முடியும். புராணம் திரும்பியே தீரும்! இந்த தமிழ்த் திருமகளுக்காக நடக்கப் போகும் இராம—இராவண யுத்தத்தில் கெலிக்கப் போவது திராவிடத்து வீரன் ராவணன்—அவனைச் சுட்டிக் காட்டும் மூவேந்தராம் சக்கரவர்த்தியின் திருமகள்! நிச்சயம் அவள் எதிரியாம் ஆச்சாரியார், படம் பிடித்துக்காட்டும் தசரதச் சக்கரவர்த்தியின் திருமகன் புறமுதுகு காட்டியே தீருவான், தென்னகம் பூரித்துப் போகும் விதத்தில்! ஃ

முரசொலி

ஆண்டு சந்தா ரூ. 6–0–0
ஆறு மாத சந்தா ரூ. 3–8–0

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

வெற்றி விழா

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்து 23-5-54 அன்று மாலை 'முரசொலி' அலுவலகத்தில் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. அலுவலகம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, 500 சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

அன்றைய தினம் மீர்சாகிப் பேட்டை தி. மு. க. சார்பாக நடைபெற்ற வெற்றி விழாவில் காலை விருந்தும், முகவை ஆர். எஸ். பாண்டியன் தலைமையில் சொற்பொழிவும் சிறப்புற நடந்தேறியது. கழகச் செயலாளர் மு. புரட்சிமணி இல்லத்தில் நண்பர்களுக்கு பகல் உணவு அளிக்கப்பட்டது.

இராயப்பேட்டை 37-வது வட்ட தி. மு. க. சார்பில் நடைபெற்ற வெற்றி விழாக் கூட்டம் தோழர் ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

"பகுத்தறிவு"

இதுவரை தமிழ் திங்கள் முதல் நாளில் வந்து கொண்டிருந்த 'பகுத்தறிவு' இதழ் இனி ஆங்கில மாதம் முதல் நாள் தோறும் வெளிவரும்.

'பகுத்தறிவு'
ஜலகண்டபுரம்

கடைசிப்பக்கம்

சிந்தாமணி—கோட்டியூர்.

(?) இரு அத்தியந்த நண்பர்களை இரு துருவங்களாகப் பிரிக்கும் சக்தி பெண்ணுக்கு அதிகமா? பணத்துக்கு அதிகமா?

பெண்ணும், பொன்னும், பிரிக்க முடியாத உறவுதான் நட்பு. உங்கள் கேள்வியே தவறு.

சம்பந்தன்—சென்னை.

(?) ரஷ்யாவிலும் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்களாமே?

ஆமாம்; சமாதானப் பிச்சை கேட்கும் பிச்சைக்காரர்கள் பலர் இருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லையே!

சதாசிவம்—பழங்குளம்.

(?) காமராசர் மந்திரி சபையில் இருக்கும் மந்திரிகளில் எத்தனை பேர் திராவிட நாட்டு பிரிவினையை ஆதரிப்பவர்கள்?

காமராசர் மந்திரிசபை மட்டுமென்ன; அவர் கட்டிக்காக்கும் காங்கிரஸ் கோட்டையே ஒரு காலத்தில் திராவிட நாட்டுப் பிரிவினையை ஆதரித்தே தீரும்!

க. சுந்தரம்—திருச்சி.

(?) திராவிட நாடு கிடைத்தால் அயல் நாட்டுத் தூதுவராக யாரை அனுப்புவீர்கள்?

வரிப்பணத்தை விரயமாக்கும் 'பண்டிதர்'களை நிச்சயமாக அனுப்பமாட்டோம்: அறிவின் தூதுவர்கள்தான் அங்கே இருப்பார்கள்!

'ஆரோ'—ஈரோடை

(?) துரோகராட்டினத்தை முழுதும் நிரப்பி விட்டீரே, அதில் அமருவதற்கு இனி ஆள்இருக்க மாட்டார் என்ற எண்ணத்தினலா?

துரோக ராட்டினத்தில் அமர்ந்திருப்பவர்கள்தான் ராட்டினத்தின் சுழற்சியைத் தாங்க மாட்டாமல் மயக்கம் போட்டு—புத்தி தடுமாறி அலைகிறார்களே; இனியும் பொதுமக்களிடையே பெருமையோடு உலவ நினைப்பவர்களுக்கு இந்த "குழந்தை மனப்பான்மை" ஏற்படாது என்கிற காரணத்தினல் தான் எங்கள் ஓவியர் அப்படி வரைந்திருக்கிறார்.

கிருபாகரன்—தி. நகர்.

(?) உலகிலேயே முதன் முதலில் புரட்சி என்ற வார்த்தை எப்போது கிளம்பியது?

"மனிதனுக்கு சிறுகுடல் என்று ஒரு அவயவம் இருக்கிறது; கொஞ்சம் சுயமரியாதை உணர்ச்சியும் அவனுக்கு உண்டு" என்கிற உண்மையை சமுதாயத்திலே உள்ள மற்றதிமிங்கிலங்கள் உணர மறுத்தபோது!

வீரப்பன்—இலங்கை

(?) மனிதன் எதற்காகப் பிறக்கிறான்?

சாவதற்காக!

தஸ்தகீர்—தூத்துக்குடி.

(?) சீர்திருத்த வாதிகளில்சிலர் இந்து மதத்தைத் தாக்கிவிட்டு கிறிஸ்தவ மதத்தை மட்டும் ஆதரிக்கிறார்களே அது ஏன்? இது, தேங்கி நிற்கும் சாக்கடையை, ஒதுக்கிவிட்டு ஓடும் சாக்கடையை ஆதரிப்பது போல் இல்லையா?

தேங்கி நிற்கும் சாக்கடையிலுள்ள கிருமிகளைக் காட்டிலும், ஓடும் சாக்கடையின் கிருமிகளுக்கு கெட்ட சக்தி குறைவாக இருக்கிற காரணமாயிருக்கலாம்.

மு.மோகைதீன்இராயப்பேட்டை

(?) கேரளமும், ஆந்திரமும், கன்னடமும், திராவிட நாடு பிரிவினையை ஆதரிக்கின்றனவா?

எதிர்க்கிறார்களா? — அதைச் சொல்லும் முதலில்.

ராசன்—திருப்பூர்.

(?) அண்ணதுரை, ஏசுவை தூற்றினாராம்-இதுஉண்மையா?

அந்தப் பெருந்தகையாளரிடம் தூற்றும் துர்குணம் அறவே இல்லையே! நேருவையே மன்னித்தவரா, இயேசுவை திட்டப் போகிறார்?

அங்கு—ராயப்பேட்டை.

(?) புதுக் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டதும் சென்னையில் அனல் காற்று வீசுகிறதாமே!

ஒரு வேளை 'கல்கி'யாரின் சோகப் பெரு மூச்சுதான் அப்படி அனல் காற்றாக மாறியிருக்கும்!

(?) கேஸ்கரின் ரேடியோ இலாக்கா எப்படி இருக்கிறது?

ஔரங்கசீப் 'சங்கீத கலா நிலைய'மொன்றை எப்படி நடத்தியிருப்பானே, அப்படியிருக்கிறது!

(?) மாலெங்கோவிற்கும் ஐசன் ஹோவருக்கும் ஒரு குஸ்தி சண்டை ஏற்பாடு செய்தால் அதில் யார் ஜெயிப்பார்கள்?

குஸ்தியில் யார் ஜெயித்தாலும் அதை மத்தியஸ்தம் செய்யப் போகும் 'ரேபரி' நேருவுக்குத்தான், காயங்கள் அதிகம் ஏற்படும் என்பதை மட்டும் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

(?) நான் செத்துவிடுவேன் என்பதை நினைத்தால் எனக்கு பயமாக இருக்கிறது. அதற்குள் நாட்டு விடுதலைக்கு உருப்படியான காரியமொன்றை செய்ய நினைக்கிறேன்; முடியுமா?

தாய் நாட்டைப் பற்றி கனவு காண்பதற்குக்கூட துணிவு வேண்டும், நண்பரே! முதலில் சாவைப் பற்றிய பயத்திலிருந்தும் விடுதலை பெறுங்கள். அதன் பின்னர் பொது வாழ்வில் ஈடுபட நீங்களே தயாராகி விடுவீர்கள்!

விரைவில் ஆரம்பமாகிறது

?

மு. க. வின் புதிய தொடர் கதை

அந்நாள் எந்நாளோ?

பாகிஸ்தான்—பஞ்சாப் முன்னாள் முதல் அமைச்சரான மியான் மும்தான் தவுலத்தானா சுமார் 90 குற்றங்களைச் செய்திருப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி குற்றம் சுமத்தியவர்கள் மாற்றுக் கட்சிக்காரர்களல்ல, 'அவதூறு' என்று ஒதுக்கிவிட! அகமதிய முஸ்லிம் வகுப்பினருக்கு எதிராக நடந்த கலகங்களை விசாரணை செய்த குழு தனது அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது.

குற்றச் சாட்டுகளில் நிர்வாக ஊழல், அதிகாரத்தை மனம் போன போக்கில் செலுத்தல், சர்க்கார் பணத்தை விரயமாக்கல் போன்ற குற்றங்களும் அடங்கியுள்ளனவாம்.

இங்கு—செல்வம் கொழிக்கும் சென்னை ராஜ்யத்திலே ஆச்சாரியார்தான் ஆட்சி நடத்தினர்—காட்டு ராஜாவின் கெடுபிடி தர்பாரை காட்சி யாக்கிக் காட்டினர்! அங்கே—பாகிஸ்தானில் அரசாங்கத்தின் பெயரால் அக்ரமங்கள் பல செய்த முன்னாள் அமைச்சரை குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகிறார்கள்.

இங்கும்தான் அரசு கட்டில் ஏறியவர்கள்—அலட்சிய முரசு கொட்டினார்கள்! எதிர்ப்புக் கிளப்பியவரைப் பார்த்து எக்காள மிட்டார்கள்.

சென்னையின் முன்னாள் அமைச்சர் மீது 90-குற்றங்களல்ல—அசெம்பிளியில் கால்வைத்த நாள் முதல்—ஆஸ்ரமத்திற்கு 'வாபசான' நாள் வரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குற்றத்தை சுமத்தலாம்—அவர் அபரிமிதமான தவறுகள் செய்துள்ளார். உதாரணமாக தென்னாட்டிற்கு நான்கே நாள் 'விஜயம்' செய்த நேருப் பண்டிதருக்கு தொண்ணூற்றேழாயிரத்துக்கு மேற்பட்ட ரூபாய்கள் பாதுகாப்பு என்னும் பெயரில் விரயம் செய்யப்பட்டிருக்கின்றன, அரசாங்கத்தின் 'கஜானா'விலிருந்து!

பஞ்சாபில் வரிப்பணத்தைப் பாழாக்கிய முதலமைச்சர் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட இருக்கிறார்—பாக். பெடரல் கோர்ட்டைச் சேர்ந்த மூன்று நீதிபதிகளுக்கு முன்னர் விசாரிக்கப்பட இருக்கிறார்!

இப்படி வாக்காளர்கள் வாயில் மண்ணைப் போட்டு—ஜனநாயகத்தின் தளிர்க்கரங்களுக்கு விலங்கு போடும் வீணர்கள் நிச்சயம் விசாரணைக்கூடத்தின் முன்னர் நிறுத்தப்படவேண்டும்—நீதியிடும் ஆணைக்கு பணியவைக்கப்பட வேண்டும்!

பஞ்சாப் செல்லும் பாதையில் நமது மானிலம் செல்லுமா? அந்த முன்னாள் அமைச்சர் தௌலத்தானாவைப் போல—நமது மாஜிப் பிரதமர் ஆச்சாரியார் நீதிமன்றத்துக்கு வருவாரா? அந்நாள் எந்நாளோ என்று நல்ல உள்ளம் படைத்தவர்கள் ஏங்குகிறார்கள். அரசியலில் நேர்மையை விரும்புவர்கள்—பஞ்சாப்தரும் பாடத்தை பெரிதும் சுவைக்கிறார்கள்-அது, கொலு மண்டபத்தை கொள்ளைக்காரர்களின் குகைக்கூடமாக மாற்றியமைக்கும் மகான்கள் தோற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்கிற காரணத்துக்காக!

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62, எஸ். பி. சன்ன தெரு, ராயப்பேட்டை, • சென்னை—14.